Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 353

வியாழக்கிழமை
14 நவம்பர் 2024

ஐப்பசி 28
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப எல்லாரும் வாக்குமாறாதவைக்கு மறக்காமல் வாக்கை போடுங்கோ"

# பொதுத்தேர்தல் இன்று பாதுகாப்பு அதியுச்சம்!

## ஜனநாயகக் கடமையை ஆற்றுக தேர்தல்கள் திணைக்களம் அழைப்பு

**கொழும்பு, நவம்பர் 14**

**இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் உச்சக்கட்டப் பாதுகாப்புக்கு மத்தியில் இன்று இடம்பெறவுள்ளது. மக்கள் அனைவரும் தமது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.**

☞ 11

# பக்கச்சார்பின்றி செயற்படுங்கள்

## தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அரச அலுவலர்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, நவ. 14

தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரச அலுவலர்கள், எவ்வித பக்கச்சார்பும் இல்லாமல் செயற்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்

☞ 11

# அமைதியான தேர்தலுக்கு யாழ்ப்பாணத்தில் வழிபாடு

கொழும்பு, நவ. 14

நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாகவும் வன்முறைகள் அற்ற முறையில் நடைபெறவேண்டியும் யாழ்ப்பாணத்தில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில், யாழ்ப்பாண சர்வமதத் தலைவர் இந்து மத குரு கிருபானந்தாக் குருக்கள் தலைமையில் இந்தக் கூட்டுப்

☞ 11



# வாக்குகளுக்காக சன்மானங்கள்

## மன்னாரில் மூவர் கைது உலருணவுப் பொதிகள் மீட்பு

மன்னார், நவ. 14

மன்னாரில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியொன்றால் வழங்குவதற்காகக் கொண்டுசெல்லப்பட்ட உலருணவுப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்

☞ 11

# முறைப்பாடு 3,359

கொழும்பு, நவ. 14

பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்து 359 முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு

☞ 11



# தமிழர் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வளிக்கவேண்டும்

## ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

கொழும்பு, நவ. 14

தமிழ்மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும். அதற்கு அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

☞ 11

## இறப்பு வீட்டுக்கு வந்து திரும்பியவர்

# விபத்தில் சிக்கி பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 14

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இறப்பு வீட்டுக்கு வந்தவர், மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்பும்போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்

☞ 11

# வடமராட்சி கிழக்கில் வீதித்தடை அகற்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதங்கேணி, நாகர்கோவில் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் அகற்றப்பட்டுள்ளன. சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்டவற்றைக்கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப் பட்டிருந்த இந்த

☞ 11

# இலங்கைக்கு பயணிக்கலாம்

## பயண எச்சரிக்கையை விலக்கியது அமெரிக்கா

கொழும்பு, நவ. 14

இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கை விலக்கப்படுவதாகவும், இலங்கைக்குப் பயணிக்கலாம் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு அறுகம்குடா பகுதியில் சுற்றுலாவிகளை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்து ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி அமெரிக்கா பயண எச்சரிக்கைகளை விடுத்திருந்தது. இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை அரசாங்கத்துக்கும்

☞ 11

# வாக்களிக்க அனுமதிக்காவிடின் ஒரு மாதம் சிறைத்தண்டனை

## பொறுப்புணர்ந்து செயற்படுமாறு பவ்ரல் அமைப்பு கோரிக்கை



கொழும்பு, நவ. 14

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காகச் செல்வதற்கு விடுமுறை வழங்காத நிறுவனங்க ளின் பிரதானிகளுக்கு ஒரு மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். எனவே பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் செலவீனம் இம்முறை இரட்டிப்பு!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, நவ.14**

**இம்முறை நாடாளுமன்றத் தேர்தலுக்கு அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் இருப்பதால், கூடுதல் வாக்கு எண்ணும் மையங்கள், ஆவணப் பணிகள், வாக்குச்சீட்டு அச்சிடுதல் போன்றவற்றில் கூடுதல் செலவுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவித்ததாவது: வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் ஏற்ப வாக்குச்சீட்டுகளில் வேறுபாடுகள் உள்ளன.

கடந்த முறை ஆயிரத்து 713 ஆக இருந்த வாக்கு எண்ணும் மையங்களின் எண்ணிக்கை இம்முறை 2 ஆயிரத்து 34 ஆக அதிகரித்துள்ளது. இவை அனைத்தும் தேர்தல் அலுவலகத்துக்கு கூடுதல் செலவாகும் - என்றார். (ச-இ)

# வேட்பாளர் பட்டியலில் அனுமதியின்றி பெயர்

## பெண்ணொருவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.14

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவொன்று தனக்குத் தெரியாமல் தன்னுடைய பெயரை வேட்பாளர் பட்டியலில் குறிப்பிட்டுள்ளதாக பெண்ணொருவர் யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளரிடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடளித்துள்ளார்.

சுயேச்சைக்குழுவொன்று தன்னுடைய அனுமதி இன்றி, வேட்பாளர் பட்டியலில் தனது பெயரை குறிப்பிட்டுள்ளனர். இதுவரை காலமும் எனக்கு இந்த விடயம் தெரியவரவில்லை.

வேறொருவர் அழைப்பை ஏற்படுத்தி தேர்தலில் போட்டியிடுகிறீர்களா? என வினாவியபோதே இந்த விடயம் எனக்குத் தெரியவந்தது. அதனையடுத்து யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள அலுவலகத்துக்குச் சென்ற போது அது என்னுயை பெயரே என்பதை உறுதிப்படுத்திக்கொண்டேன் என்றும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-26)

# தேர்தல் சுவரொட்டிகள் பொலிஸாரால் அகற்றம்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.குடாநாட்டில் போட்டியிடும் வேட்பாளர்களால் ஒட்டப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை ஈடுபட்டனர். பொதுத்தேர்தல் இன்று இடம்பெறும் நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகாமையில், பொதுஇடங்களில் ஒட்டப்பட்ட தேர்தல் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன. அத்துடன் வீதிகளில் வரையப்பட்ட வேட்பாளர்களின் சின்னங்களும் அழிக்கப்பட்டன. (ச-22- 17)

# தேர்தல் கடமைக்கு வருவது கட்டாயம்!

கொழும்பு, நவ.14

தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகளும் அந்த நியமனங்களை மாற்றவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியாது. தேர்தல் கடமைக்குச் சமுகமளிக்காதது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகளும் நியமிக்கப்பட்ட நாளில் தமக்கு வழங்கப்பட்ட நியமிக்கப்பட்ட இடத்தில் கடமையாற்றுவது கட்டாயமாகும் என்றும் வலியுறுத்தினார். (ச)

# மின்கட்டணத் திருத்தம் அடுத்தவாரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ.14

மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள் அடுத்த வாரத்துக்குள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை இலங்கை மின்சாரசபை கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

எனினும், ஆட்சிமாற்றத்தின் பின்னர் அந்த முன்மொழிவுகளை மீள்திருத்தம் செய்து நவம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சாரசபையிடம் ஆணைக்குழு மீண்டும் கோரியிருந்தது.

புதிய முன்மொழிவைத் தயாரிக்கவும் கணக்கீடு திருத்தங்களுடன் சமர்ப்பிக்கவும் மேலதிகமாக இரண்டு வாரங்கள் இலங்கை மின்சாரசபை அவகாசம் கோரியிருந்தது. அதன் பிரகாரம் அடுத்தவாரம் இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட உள்ளது. (ச-இ)

# சமூக ஊடகங்கள் தேர்தல் விதிமீறல்


## குவியும் முறைப்பாடுகள்



கொழும்பு, நவ.14

ஒக்ரோபர் 11 முதல் நவம்பர் 11 வரையிலான காலத்துக்குள் சமூக ஊடகங்கள் வழியாக தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக மொத்தம் 490 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

வெறுப்புப் பேச்சு, இனம் மற்றும் மதத்துக்கு எதிரான அவதூறு அறிக்கைகள், தேர்தல் பிரசாரத்துக்கு சிறுவர்களைப் பயன்படுத்துதல் மற்றும் தவறான தகவல்கள் தொடர்பான உள்ளடக்கம் மீதான நூற்றுக் கணக்கான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்ததாகத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# வாக்காளர்களுக்காக போக்குவரத்துச்சேவை

கொழும்பு, நவ.14

பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்காக இன்று விசேட போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

பயணிகளின் வசதி கருதி தேவையான போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் மற்றும் தொடருந்து திணைக்களம் என்பன அறிவித்துள்ளன.

பயணிகளின் வசதி கருதியும் 80 பேருந்துகளை மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, நாளாந்தம் பயணிக்கும் ரயில்களை விடவும் மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்துள்ளார். காங்கேசன்துறை வரையிலும் திருகோணமலை வரையிலும் பயணிக்கும் தொடருந்துகளில் மேலதிக தொடருந்துப் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் காங்கேசன்துறை வரை விசேட கடுகதி தொடருந்துகளையும் சேவையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# நத்தார் பண்டிகையால் முட்டை விலை எகிறும்

யாழ்ப்பாணம், நவ.14

முட்டை ஒன்றின் விலை 60 ரூபா தொடக்கம் 65 ரூபா வரை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உற்பத்தி சார் விலை மும்மடங்கு அதிகரிப்பால் கோழித்தீவனத்தை உற்பத்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு முட்டை விலை 60 தொடக்கம் 65 ரூபாய் வரைக்கும் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு சோதனைச்சாவடி 17 வருடங்களின் பின் அகற்றம்

கொழும்பு, நவ.14

**கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஆனையிறவுப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த வீதித்தடைகள் 17 வருடங்களின் பின்னர் நீக்கப்பட்டுள்ளன.**

1952 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த இந்த வீதித்தடையை 2000ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கை மூலம் ஆனையிறவு மீட்கப்பட்டு மீண்டும் அந்த வீதி திறக்கப்பட்டது. அதன் பின்னர் 8 வருடங்களின் கழிந்து, அதாவது 2008 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடம்பெற்ற இறுதிப் போரின் பின்னர் மீண்டும் குறித்த வீதிச் சோதனைச்சாவடிகள் இடப்பட்டன.

இந்த நிலையில், சுமார் 17 வருடங்களுக்கு பின்னர் ஆனையிறவு சோதனைச்சாவடி மீண்டும் நீக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# விசேட தேவையுடையோர் வாக்களிப்பதற்கு வசதிகள்

யாழ்ப்பாணம், நவ.14

பொதுத்தேர்தலில் விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி வாக்கெடுப்பு நிலையத்தினுள் தங்களது வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச்செல்ல சட்டரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு நிலையத்துக்குச் சென்று வரத் தேவையான போக்குவரத்து வசதிகளை தங்களது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

வாக்கை அடையாளமிட முடியாதவர்களுக்கு வாக்குச் சீட்டிற்கு வழிகாட்டும் தொடுகைச் சட்டகம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

டிசெம்பர் 31 க்குள்

# தேர்தல் கடமை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.14

ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களின் கொடுப்பனவுகள் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களின் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பில் ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சில வலயக்கல்விப் பணிமனைகளில் இருந்து உரிய படிவங்கள் இன்னமும் வந்து சேரவில்லை. சில உத்தியோகத்தர்கள் படிவங்களைப் பிழையாக நிரப்பியுள்ளனர். இதனால் தான் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறதேயன்றி தேர்தல்கள் திணைக்களத்தின் மீது எந்த தவறுமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



# தேர்தல் அலுவலர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், நவ.14

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டுச் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட உதவித்தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் அலுவலர்களுக்கு மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார். (ச-45-66)

# வினாத்தாளில் அரசியல்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, நவ, 14

க.பொ .த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பொதுஅறிவு வினாத்தாளில் அரசியல் தொடர்புடைய வினா ஒன்று இடம்பெற்றமை தொடர்பாக கல்வித் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த வினாத்தாள் பாடசாலை நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டது எனவும் இதற்கும் கல்வித்திணைக்களத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை எனவும் பரீட்சை திணைகளத்தின் செயலர் திலக் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். எனினும் பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# பசளை மானியம்

கிளிநொச்சி,நவ,14

கிளிநொச்சி விவசாயிகளுக்கு பசளை மானியம் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 8 ஆயிரத்து 479 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் 9 ஆயிரத்து 64 விவசாயிகளுக்கு ரூபா 127,191, 615.00 ரூபா பசளை மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-25,113)



# தினம் தெரியுமோ?

**எல்லாரும் எப்பவும் எல்லாத்தையும் சரியாச் செய்யேலாது. அவையின்ர கையை மீறியும் காரியங்கள் நடந்திடும். அப்பிடி அவைக்கே பிழை எண்டு தெரியாமல் நடந்ததுகளை ஆரும் சுட்டிக்காட்டினால் அதைத் திருத்திக் கொள்ளுறது அவையில இருக்கிற மதிப்பையும், நம்பிக்கையையும் கூட்டும். அப்பிடி தங்கள் மீதான நம்பிக்கையைக் கூட்டுற ஒரு வேலையை யாழ்ப்பாணத்தில தேர்தல்கள் திணைக்களம் செய்திருக்கு.**

**ஜனாதிபதித் தேர்தல் முடிஞ்சவுடன, பட்சி சுட்டிக் காட்டின ஒரு விசயம் கனபேருக்கு ஞாபகம் இருக்கோ தெரியாது. அந்தத் தேர்தலில சில வாக்களிப்பு நிலையங்கள் கோயில் மண்டபங்களில வைச்சதால கொஞ்சப்பேர் வாக்களிக்கப் போகேலை எண்டதுதான் அந்த விசயம். அடுத்த எலக்சன் நடக்கேக்க அப்பிடி கோயில் மண்டபங்களில இருக்கிற வாக்களிப்பு நிலையங்களை, அதுகளுக்குப் பக்கத்தில இருக்கிற பொதுமண்டபங்கள், வாசிகசாலையளுக்கு மாத்தினால் வாக்களிப்பு வீதம் கூடுமெண்டதால அதை மாத்த தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கோணுமெண்டு பட்சி கோரிக்கையும் முன்வைச்சது. இப்ப அதுக்குப் பலன் கிடைச்சிருக்குது. பட்சியைப் பார்த்ததாலையோ இல்லாட்டி தாங்களாவே அந்தப் பிழையைக் கண்டுபிடிச்சோ இந்தமுறை அப்பிடிப்பட்ட வாக்களிப்பு நிலையங்களை வேற இடத்துக்கு மாத்தியிருக்கினம். யாழ்ப்பாணத்தில அப்பிடி 12 இடங்கள் வேற இடங்களுக்கு மாத்துப்பட்டு இருக்கு. தவறைத் திருத்தி வாக்களிப்பை கூட்டுறதுக்கு யாழ்ப்பாணத் தேர்தல்கள் திணைக்களம் எடுத்த இந்த நடவடிக்கைக்கு பட்சியின்ர சார்பில ஒரு 'சபாஷ்!'**

☆☆☆☆☆

**இந்தமுறை எலக்சன் பிரசாரங்களில கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிற அளவுக்கு அளவுகணக்கில்லாத பகிடியள் நடந்திருக்குது. அப்பிடியொரு பகிடியை நேற்றும் பார்த்தம். போன திங்கள் கண்டியில நடந்த கூத்தைப் பாப்பம். அங்க ஒரு முன்னாள் அமைச்சரும் எலக்சனில நிக்கிறார். இந்தமுறை பிரசாரங்களில ஈடுபடுறவை, ரீசேர்ட்டுகளில் சின்னமோ, விருப்பு இலக்கமோ அச்சடிச்சுப் போடக்கூடாது எண்டு ரூல்ஸ் இருக்குது. ஆனால் ரூல்ஸ் போட்டால் அதை எப்பிடி குறுக்குவழியில உடைக்கிறதெண்டு அமைச்சரா இருந்தவருக்கு சொல்லிக்குடுக்கத் தேவையில்லைத்தானே. அந்த அமைச்சரின்ர விருப்பு வாக்கு இலக்கம் 10. அதால அவர் என்ன செய்தார் எண்டால், புட்போல் வீரர் மெஸ்ஸியின்ர ஜேர்சியைப் போட்டுக்கொண்டு பிரசாரத்துக்குப் போயிருக்கிறார். மெஸ்ஸியின்ர ஜேர்சி நம்பரும் 10 தான். சின்னப் பிள்ளையளுக்கே இது தெரியும். அதோட மெஸ்ஸியைப் பிடிச்ச எல்லாரும் அவரின்ர நம்பர் போட்ட ஜேர்சியை சாதாரணமாப் போட்டுக்கொண்டு திரியிறவை.**

**அதால அந்த முன்னாள் அமைச்சரும் மெஸ்ஸியின்ர ஜேர்சியைப் போட்டுக்கொண்டு போக, பொலிஸ் மறிச்சுப் போட்டுது. "உதெல்லாம் அலாப்பி விளையாட்டு. உங்கட நம்பரும் 10, ஜேர்சி நம்பரும் 10. அதால போட ஏலாது" எண்டு பொலிஸ் சொல்ல, அவரும் "தேர்தல் திணைக்களம் மெஸ்ஸியின்ர ஜேர்சியைப் போட ஏலாது என்று சட்டம் போட்டிருக்கா? போட்டால் காட்டுங்கோ" எண்டு கேட்டிருக்கிறார், ஆனால் பொலிஸ் சொன்னதையே திரும்பச் சொல்லிக்கொண்டிருக்க, ஒரு கட்டத்தில அந்த முன்னாள் அமைச்சர் மெஸ்ஸியின்ர ஜேர்சியைக் கழற்றிப்போட்டு வெறும் மேலோட மேடையில ஏறிட்டாராம். வெறும் மேலோட நிக்கேலாது எண்டு பொலிஸ் சொல்லேலாதெல்லோ. அண்டைக்கு கூட்டம் முடியும் மட்டும் அந்த முன்னாள் அமைச்சர் வெறும் மேலோட தான் நிண்டவராம்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில்
# 306,081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி

வவுனியா, நவ.14

**வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 3 இலட்சத்து 6ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ளனர்.**

அந்தவகையில் வவுனியாவில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும் முல்லைத்தீவில் 86ஆயிரத்து 889 பேரும் மன்னாரில் 90ஆயிரத்து 607பேரும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக வன்னியில் 4 ஆயிரத்து 995 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன்.3 ஆயிரத்து 898 பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை வவுனியாவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, மன்னார் மாவட்டத்தின் மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலயம் ஆகியவை வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக செயற்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)



## ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.14

தென்மராட்சிப் பிரதேச அஸ்வெசும நலன்புரித்திட்டப் பயனாளிகளுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் வங்கிகளில் விநியோகிக்கப்படுகின்றன.

பிரதி 15 ஆம் திகதி இந்தக் கொடுப்பனவுகள் விநியோகிக்கப்படும். நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அலுவலர்கள், கடமைக்குச் செல்வதற்காகக் கொடுப்பனவுகள் முன்கூட்டியே விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-45,9)

## ஆக்கங்கள் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், நவ.14

சாவகச்சேரி நகரசபை பொது நூலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நூல்கள் மற்றும் ஓவிய ஆக்கங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நகரசபைச் செயலாளர் தலைமையில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதேச மாணவர்கள் மற்றும் எழுத்தாளர்களின் 5 ஆயிரத்துக்கும் [illegible] மேற்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகள் மற்றும் ஓவியங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. (ச-22,9)





## வடமராட்சிக் கல்வி வலயத்தின் மாணவர் நாடாளுமன்றம்!

யாழ்ப்பாணம், நவ.14

வடமராட்சிக் கல்வி வலய மாணவர் நாடாளுமன்ற அமர்வு வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரும், மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான ப. அருந்தவச்செல்வம் தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரேரணைகளை முன்வைத்ததைத் தொடர்ந்து அடுத்த அமர்வுத் திகதி தீர்மானிக்கப்பட்டு அமர்வு நிறைவுற்றது. இதில் பிரதம விருந்தினராகத் துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிறைஜா மயூரதாசன் பங்கேற்றார். (ச-22,27)



யாழ்ப்பாணம், நவ.14

சாவகச்சேரித் தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நடராஜா ரவிராஜின் நினைவாக பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் இயக்கமும் இணைந்து நடத்திய மரநடுகை நிகழ்வு கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை முன்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். (ச-22-159)

## வருடாந்தப் பொங்கல்

யாழ்ப்பாணம், நவ. 14

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரக் காளி கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும் என்று ஆலய பரம்பரை தர்மகத்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ச-10)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வெளியூர்களில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.



**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பு அதிகரிக்கும்.



**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதர வகையில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும்.



**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.



**சிம்மம் :** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் இழுபறியே காணப்படுகிறது. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.



**கன்னி:** தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.



**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**விருச்சிகம் :** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.



**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.



**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.



**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வது மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வாக்களிப்பது தேசியக் கடமை!

இலங்கையில் இன்று தேர்தல் திருவிழா. அடுத்த ஐந்து ஆண்டுகள் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் தீர்க்கமான நாள்தான் இன்றைய நாள். ஆனால், அதற்குரிய பரபரப்பும், ஊடாட்டமும் நாட்டில் இருக்கின்றதா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக அமையும். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கட்சிகளும், சுயேச்சைகளும் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கியிருக்கின்றன. ஆனால் மக்களோ,'இராமன் ஆண்டென்ன, இராவணன் ஆண்டென்ன அல்லது கூடவந்த ஹனுமன்தான் ஆண்டென்ன' என்ற மனோநிலையில் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சொலப்போனால், இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் மதிப்பிழக்கப்பட்ட தேர்தல்களில் ஒன்றாக இந்தத் தேர்தல் அமைந்துவிடக்கூடிய ஆபத்து மிக அதிகம்.

ஜனநாயக ஆட்சி எனப்படுவது, மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களுக்குரிய ஆட்சி என்று வரையறுக்கின்றார் அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஆபிரகாம் லிங்கன். அந்த வகையில், ஒவ்வொரு அரசாங்கத்தின் வெற்றிக்கும், தோல்விக்கும், எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அந்தந்த மக்களும் காரணமானவர்கள். ஏனெனில் அரசாங்கத்தை அமைப்பது மக்கள்தான். ஒரு வகையில் பார்க்கப்போனால், 'இத்தனை காலமும் மாறிமாறி ஆட்சியமைத்த அரசாங்கங்கள் இலங்கையை பொருளாதார நலிவு நிலைக்குள் தள்ளியிருக்கின்றன' என்று விமர்சித்துவிடமுடியாது. ஏனெனில், அப்படிப்பட்ட திறமையற்றவர்களைத் தெரிந்தெடுத்து ஆட்சியில் அமர்த்துபவர்களும் நாமேதான். இவ்வாறானதொரு பின்னணியில், இன்றைய தேர்தல்மூலம் பல செய்திகளைச் சொல்ல வேண்டிய கனதியான பொறுப்பு எமக்கும் உண்டு.

ஆதலால், தேவையற்ற ஆதாயங்களுக்காகவும் மிகச்சொற்பத் தனமானதும் அற்பத்தனமானதுமான அரசியல் சுயநலன்களுக்காகவும் எம் உரிமைகளைத் தொலைக்காதிருக்கவேண்டிய காலக்கடமை இன்றுள்ளது. பல தசாப்தங்களாக நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு முதல், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட நகர்வுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் எனப் பல பிரச்சினைகள் இன்னமும் தீர்வின்றி நீண்டுகொண்டே இருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தேசியக் கட்சிகள் தமிழர் தாயகத்தின் வாக்குகளுக்காக தவமாய் தவமிருக்கும் காலச்சூழலில் தமது தெரிவை சரியான முறையில் வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் இன்றிருக்கின்றது.

தமிழ் மக்கள் தற்போதைய நிலைமையை விளங்கிக்கொள்ள வேண்டும். எமக்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பதில் ஒன்றுமையாக, ஒரே குரலாக எமது அபிலாஷைகளை வெளிப்படுத்தவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்தால் மட்டுமே, இனப்பிரச்சினைக்குத்தீர்வை வழங்கினால் மட்டுமே தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை தெற்கின் முகத்தில் அறைந்து கூறக்கூடிய காலம் இப்போது கனிந்திருக்கின்றது. தமிழ் மக்கள் தம் உரிமைக்கான குரலை முழங்கிட, வாக்கெனும் ஆயுதத்தை ஒற்றுமையாகப் பிரயோகித்தால், அதைவிட கனதியான வேறு செய்தி ஏதுமில்லை.




# புள்ளடிகள் மாத்திரமே வாக்குச்சீட்டில் இடுக!

கொழும்பு, நவ. 14

**இன்று இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிக்கும்போது, புள்ளடியை மாத்திரம் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது 1,2,3 என இலக்கங்கள் அல்லது புள்ளடிகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் பலரும் குழப்பத்துக்கு உள்ளாகியிருந்தனர். எனினும் இன்று இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிக்கும்போதும், விருப்பு வாக்குகளை வழங்கும்போதும் புள்ளடியை மாத்திரமே பயன்படுத்த வேண்டும். எனவே உரிய முறையைப் பின்பற்றி அளிக்கும் வாக்கு செல்லுபடியாகும் வாக்காக வாக்காளர்கள் மாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## எரிபொருள் கையிருப்பு

யாழ்ப்பாணம், நவ.14

பொதுத்தேர்தலை முன்னிட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள்களை போதியளவு சேமித்து வைத்திருக்கவேண்டும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை சகல எரிபொருள் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் கையிருப்பை உரியமுறையில் பேணும்வகையில் கடனடிப்படையில் எரிபொருள்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கிவருகின்றது. (ச-17)




## மோட்டார் திணைக்களம் இன்று பூட்டு

யாழ்ப்பாணம், நவ.14

நாடாளுமன்றத்தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக நாரஹேன்பிட்டியவில் உள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இன்று மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய கடமைகளுக்காகத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## குளவிகொட்டி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ.14

குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஆறுபேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புஸ்ஸல்லாவ- மெல்பட்வத்த பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 50 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)



## 15 மோசடிகள் விசாரணை

கொழும்பு, நவ.14

கடந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 15 மோசடிகள் மற்றும் ஊழல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக 3,040 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அதன் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார். (ச-இ)

### நாளை

15.11.2024

வெள்ளிக்கிழமை - ஐப்பசி - 29

சுபநேரம் : 06.07 - 07.37

ராகுகாலம் : 10.37 -12.07

### நாளொரு நல்வார்த்தை

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"

- நி.தி.மிரோவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பெட்டிகள்



படங்கள்: ஐ.சிவசாந்தன்



## யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம், நவ.14


இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக யாழ்.மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்றன.

இதன்போது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூஸன் சூரியபண்டார ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ச-26,20,9,66)



## மன்னார்



மன்னார் மாவட்டச் செயலகத்திலிருந்து 98 வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றுக் காலை வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டச் செயலாளருமான க.கனகேஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வி.சிவராஜா உள்ளிட்ட அதிகாரிகளின் கண்காணிப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பப்பட்டன. (ச-22,56,60)

## கிளிநொச்சி



கிளிநொச்சி மாவட்ட பழைய மாவட்டச் செயலக வளாகத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் பதில் மாவட்டச் செயலருமான எஸ்.முரளீதரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் ஒரு தொகுதியாக அடங்கும் கிளிநொச்சியில் ஒரு லட்சத்து 907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ச-113)

## வவுனியா





வவுனியா, நவ.14

வன்னி தேர்தல் மாவட்டத்தில் உள்ள 387வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் நேற்று அனுப்பிவைக்கப்பட்டதாக வன்னி மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் பி.எ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத்தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் 152 வாக்களிப்பு நிலையங்களும் முல்லைத்தீவில் 137 வாக்களிப்பு நிலையங்களும் மன்னாரில் 98 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த நிலையங்களுக்கு தேவையான வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் ஏனைய ஆவணங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களிலிருந்து நேற்று காலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.14

ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் கலை விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் சனசமூக நிலைய தலைவர் சி.இளங்கோ தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொண்டார். (ச)

## விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ. 14

சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் பாரம்பரிய போஷாக்கு உணவினை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட முகாவில் கிராம அலுவலகர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் வளவாளராக சமூக மருத்துவ உத்தியோகத்தர் சி. நிரோஜன் கலந்து கொண்டார். (ச-25, 9)




## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.14

மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய அரங்க மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும், யாழ். பல்கலைக்கழக விவசாய இரசாயனவியல் துறைத் தலைவருமான கலாநிதி சுபாஜினி சிவகாந்தனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் மற்றும் வித்தியாலயப் பழைய மாணவனும், சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஐ.தேவஈஸ்வரனும், விருந்தினராக வித்தியாலயப் பழைய மாணவியும், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலம் மற்றும் விவசாய பீட வருகை விரிவுரையாளருமான சிவப்பிருந்தா சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-9)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் சூரசம்ஹார உற்சவம் கடந்த வியாழக்கிழமை மாலை பலநூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. (ச-66)





## வாசிப்பு மாத நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், நவ.14

துணுக்காய் பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தொனிப்பொருளில் பிரதேசசபையின் செயலாளர் மா.மகாதேவன் தலைமையில் துணுக்காய் பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.விமல்ராஜ், துணுக்காய் வலயப் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-45-10)




## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட வரணி நூலகத்தின் தேசிய வாசிப்புமாதப் பரிசளிப்பு விழா சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில், வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் ஹரி குழும நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சோ.யாதவன், சிறப்பு விருந்தினர்களாக வரணி மத்திய கல்லூரி பிரதி அதிபர் தெ.செந்தூரன், கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் திருமதி ம.தீபா, கௌரவ விருந்தினராக சமூகச் செயற்பாட்டாளர் சி. பரஞ்சோதி உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25,159)



கந்தசஷ்டி விரத காலப் பகுதியை முன்னிட்டுக் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 6 ஆம் திகதி புதன்கிழமை வரையான காலப் பகுதியில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் இரண்டு மில்லியன் ரூபா நிதியில் பழப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25.66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
## 13.11.2024ம் திகதி பிரசுரித்த 2025ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

குறித்த கேள்வி அறிவித்தலில் 10ம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, மீன், இறைச்சி கடை, அரைக்கும் ஆலை, மதுபானசாலை போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மற்றும் ஓமந்தை கடைத் தொகுதிக்கு விண்ணப்பிப்பவர்கள் மேற்குறித்த கடைகளுடன் மரக்கறி கடைகள், உணவகங்கள் நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2050067, மற்றும் 024-2225737 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

(CR/43701) J-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## படவரைஞர்களை பதிவு செய்தல் - 2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள்) கீழ்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் 18.11.2024 ஆம் திகதி முதல் 31.12.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- NVQ – 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞருக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
- 31.12.2024 இற்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்கள் தாமதக் கட்டணமாக ரூபா 1000.00 இனை செலுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்யத்தவறிய அல்லது புதுப்பிக்கத் தவறிய எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.


**குறிப்பு:-**

- படவரைஞராக பதிவுசெய்தல் / புதுப்பித்தல் விண்ணப்ப படிவக் கட்டணம் ரூபா 1000.00
- புதிதாக படவரைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 3000.00.
- 2024 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டிற்காக பதிவினை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரூபா 2000.00.

**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

14.11.2024 (cr.43700) (N-1)

## சேவை நலன் பாராட்டு



யாழ். போதனா வைத்திய சாலையில் 36 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிப் பொறுப்புத்தாதிய உத்தி யோகத்தராகவும் கடமையாற்றி 12.11.2024 அன்று ஓய்வு பெற்றுச் சென்றுள்ள

**திரு. செல்லத்துரை சந்திரகுமாரன்**

அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*Best Wishes*

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
போதனா வைத்திய சாலை
யாழ்ப்பாணம்.

(CS 1840) A-1

## 100வது பிறந்த நாளும் 17வது நினைவஞ்சலியும்

தோற்றம்
14 . 11 . 1924



மறைவு
25 . 10 . 2007

அமரர் **வல்லிபுரம் மகேந்திரராஜா**
(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)
திதி : சதுர்த்தசி 14.11.2024

இரண்டும் ஒன்றாக வந்தது புதுமையிலும் புதுமை
உங்களை பார்க்க வேண்டும் போல இருக்கிறது.
ஆசை அப்பா உங்களுடன் இருந்த நாட்களை
மறக்க முடியவில்லை அப்பா

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(CS/56653) J-1

## முதியோர் கொடுப்பனவு

கொழும்பு, நவ.14 தென்மராட்சி பிரதேச முதியோர்களுக் கான ஒக்ரோபர் மாதக் கொடுப்ப னவுகள் இன்று தொடக்கம் அந்தந்த அஞ் சல் அலுவலகங் களில்வி நியோ கிக்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. பிரதேச சமூக சேவைகள் அலகினால் கொடுப்பனவுக்கு ரிய பட்டியல் நேற்று அந் தந்த அஞ்சல் அலுவலகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. கொடுப்பனவு களை எதிர்வரும் 23 ஆம் திக திக்கு முன்னர் பெற்றுக்கொள் ளுமாறும் அறிவிக்கப்பட் டுள்ளது.

(ச-9)

# மரண அறிவித்தல்

## பரராஜசிங்கம் புஸ்பராஜா

**(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)**



தோற்றம்
05.08.1943

மறைவு

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் புஸ்பராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (12.11.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் இளைய புதல்வரும், ஓய்வுபெற்ற ஆசிரியர் கதிரவேலு - இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட மருமகனும், காலம்சென்ற விஞ்ஞான ஆசிரியை சியாமளாவின் பாசமிகு கணவரும், மிதுனாவின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், காண்டீபனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், அதீரனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மகேஸ்வரி, ஞானேஸ்வரி, மாணிக்கராஜா, மற்றும் தனராஜா காலம்சென்றவர்களான தருமராஜா, யோகேஸ்வரி மற்றும் வியாளேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ரஞ்சினி, பாலச்சந்திரன், சுமித்திரா, கௌசல்யா, பிருந்தா காலஞ்சென்ற வர்களான நடராஜா, தாமோதரம் பிள்ளை, குலத்துங்கம், ஜெகதீஸ்வரி, விஜயலட்சுமி, சண்முகலிங்கம், மற்றும் பத்மாவதி, தேவகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை குசவம்பாள் வீதியில் உள்ள அவர் வசித்துவந்த இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/56662) J-!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேய்ச்சல் தரவையை மீட்டுத் தாருங்கள்

## நானாட்டான் பண்ணையாளர் ஆளுநருக்கு மனு கையளிப்பு

**மன்னார், நவ.14**

**மன்னார், நானாட்டான் பிரதேச பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீட்டால் எட்டு வருடங்களாகக் கையளிக்கப்படவில்லை. எமக்கான மேய்ச்சல் தரவை நிலத்தை மீட்டுத்தர ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

- இவ்வாறு நானாட்டான் பண்ணையாளர்கள் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் மனுவொன்றைக் கையளித்து தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நானாட்டான் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவை நிலத்தை நம்பி 2 ஆயிரத்து 500 குடும்பங்கள் இங்குள்ளன. எமக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்ட போதிலும் அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் தலையீட்டால் நிலம் கையளிக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது.

மேய்ச்சல் தரவை நிலத்தைத் தருமாறு எட்டு வருடங்களுக்கு மேலாகப் போராடி வருகிறோம்.

எனவே, பிரதேச மக்கள் வாழ்வாதாரத் தொழிலாக பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் எமக்கான மேய்ச்சல் தரவை நிலத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-27)

# பொதுத்தேர்தலுக்கு மன்னார் தயார்நிலையில்

*மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.14

நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் பூர்த்தியாகியுள்ளதாக மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும்,மாவட்டச் செயலாளருமான க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக ஆயிரத்து 603 அரச உத்தியோகத்தர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மாவட்டச் செயலகத்தில் உள்ள 8 வாக்கு எண்ணும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-56)

# கொழும்புத்துறையில் டெங்குக் கட்டுப்பாடு



யாழ்ப்பாணம், நவ.14

விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கொழும்புத்துறையில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

ஜே/62, ஜே/63 கிராசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் புகை அடிக்கப்பட்டு நுளம்புகள் விரட்டி அடிக்கப்பட்டதுடன் சுமார் 800 வரையிலான குடியிருப்புகள் சோதனையிடப்பட்டன.

இதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்குக் களப் பணியாளர்கள், பொலிஸார் கலந்துகொண்டனர். (ச-22-17)

# மகரஜோதி பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.14

நயினாதீவு மலையிற்புலம் சபரீச ஐயப்பனின் மண்டலபூஜை மகர ஜோதிப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி 14.01.2025 வரையான 60 நாள்கள் நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி ஆரம்பமாகும் மண்டல பூஜை எதிர்வரும் 26 ஆம் திகதி நிறைவுபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25)



# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ, 14

தேசிய சமாதானப் பேரவை மற்றும் சொண்ட் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட சர்வமதக்குழுவின் இணைப்பாளர் ஜென்சி விக்டரின் ஒழுங்குபடுத்தலில், யாழ். மாவட்டத்தில் இன, மதங்களுக்கு இடையிலான பதற்ற நிலை தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-25,27)

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனை நல்லெண்ண அடிப்படையில் நேற்றுப் புதன்கிழமை சந்தித்தனர்.

இதன்போது சங்கத்துக்கான நிரந்தர இடம் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடினர். சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரைநூலும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செயலாளர் ச. லலீசன், விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-22,66)



## வைரஸ் தொற்று

# குழந்தைகளை பாதுகாக்கவும்

கொழும்பு, நவ.14

இலங்கையில் அண்மைக்காலமாக வாய், கை, பாத வைரஸ் நோய்கள் அதிகரித்து வருகின்றன. பாடசாலை மாணவர்களிடையே இந்த நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபல் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, நவம்பர், டிசெம்பர் ஆகிய குளிர் பருவத்தில் இந்தத் தொற்று அதிகமாகப் பரவும்.

குழந்தைகளின் கைகள், கால்கள் அல்லது வாயில் சிறிய சிவப்பு அல்லது வெள்ளைக் கொப்புளங்கள், அல்லது கைகளில் பழுப்பு நிற செதில்களுடன் கூடிய சிவப்பு நிற சொறி போன்ற அறிகுறிகள் இருந்தால், இது மேலும் பரவாமல் இருக்க 4 அல்லது 5 நாள்களுக்கு குழந்தைகளை வீட்டில் வைத்து பெற்றோர் பாதுகாக்கவேண்டும்.

அதேவேளை டெங்கு மற்றும் இன்புளுவென்ஸா வைரஸுடன் தொடர்புடைய பிற நோய்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி பாரததேவி நடராசா

**பிறப்பு: 27.09.1935** **இறப்பு: 13.11.2024**

கொக்குவிலை பிறப்பிடமாகவும், அளவெட்டி மற்றும் தற்சமயம் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாரததேவி நடராசா அவர்கள் நேற்று (13.11.2024) இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் நல்லதம்பி நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களாகிய கிருஷ்ணபிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களாகிய நல்லதம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், கிருபாகரன் (பேராசிரியர்), பகீரதன் (பல் வைத்திய நிபுணர்), யோகராசா (நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மைதிலி (வைத்திய கலாநிதி), விவிதா, ஷாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலா, உமை, பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அமரர் ஸ்ரீரங்கநாயகி, அமரர் ஸ்ரீரகுவரன், ஸ்ரீபத்மநாதன், ஸ்ரீசரவணபவன், அமரர் பார்கவிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்களாகிய வல்லிபுரம், தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (14.11.2024) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை மற்றும் நாளை (15.11.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, ஈமக்கிரியைகள் மாலை 4.00 மணிக்கு நடைபெற்று, மாலை 6.00 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
(CR 43706) A-1 **குடும்பத்தினர்**



# யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

**மார்க்கண்டு நடராசா**
விஜியகம்,
கோட்டைக்கல்லாறு,
மட்டக்களப்பு.
**- வழக்காளி**

வழக்கு இல : விசேடம் /36 /2024
தன்மை : விசேடம்
பெறுமதி : ரூபா 5000
முறை : கிரமம்

**எதிர்**

1. **மாவை சேனாதிராசா**
இலங்கைத் தமிழரசுக்கட்சி
16 (3), மார்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
2. **மருத்துவர் ப. சத்தியலிங்கம்**
(பதில்) பொதுச்செயலாளர்
இலங்கைத் தமிழரசுக்கட்சி
16 (3), மார்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
3. சேவியர் குலநாயகம்
இலங்கைத் தமிழரசுக்கட்சி
16(3), மார்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

**- எதிராளிகள்**

**மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியால்**

I. 1 முதல் 3 வரையான எதிராளிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு கூட்டப்பட்டு முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் வரை கட்சியின் நிர்வாகப் பதவி எதனையும் வகிக்கத் தகுதி அற்றவர்கள் என்ற நிரந்தர தடைக்கட்டளைக்கும்.

II. 1 முதல் 3 வரையான எதிராளிகள் 27.01.2024 இற்குப் பின்னராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழுவை கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் வெற்றும் வெறிதானவையும் என்ற கட்டளைக்கும் தீர்ப்புக்கும்.

III. 1 ஆம் 2 ஆம் எதிராளிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு என்ற பெயரில் எவ்வித கூட்டங்களினையும் கூட்டக்கூடாது என்ற **இடைக்காலத் தடைக்கட்டளைக்கும்.**

IV. 1 ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்ற **இடைக்காலத் தடைக் கட்டளைக்கும்.**

V. 2 ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்ற **இடைக்காலத் தடைக் கட்டளைக்கும்.**

ஆகிய நிவாரணங்களை கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 18 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**மன்றின் கட்டளைப்படி**

**திகதி: 12.11.2024**

**(ஒப்பம்)**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

**வரைவு**
**(ஒப்பம்)**
**வழக்காளியின் சட்டத்தரணி.**


வடக்கில்

# படையினர் வசமுள்ள நிலங்கள் விரைவில் மீளளிப்பு

கொழும்பு, நவ,14

வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் நோக்குடன் கையகப்படுத்தப்பட்ட நிலங்களைப் படிப்படியாக விடுவித்து வருவதாகவும், படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த 90 வீதமான நிலங்கள் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும் பேச்சாளருமான நளின் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றின் கேள்விக்குப் பதிலளித்த போதே நளின் ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ச-25, 6)





# மழலைகள் கலைநிகழ்வு!

யாழ்ப்பாணம், நவ. 14

துன்னாலை கொத்தணி முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் கலை நிகழ்வு துன்னாலை வடிவேலர் மணிமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. துன்னாலை கொத்தணி தலைவி திருமதி சிவச்செல்வன் பவித்ரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வட மாகாண பொறியியலாளர் கணவதிப்பிள்ளை ஐங்கரன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியசீலன், வடமராட்சி வலய மும்மொழி ஆசிரிய ஆலோசகர் ஜோன் அன்ரனி சார்ல்ஸ் லசாரஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-25-100)


# மரண அறிவித்தல்

**வையகத்தில்** 29 . 01 . 1943

**விண்ணகத்தில்** 12 . 11 . 2024



## சாரங்கபாணி உருத்திரபசுபதி

**(ஓய்வு பெற்ற மின்சார அத்தியட்சகர் இலங்கை மின்சார சபை)**

மாதகலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சாரங்கபாணி உருத்திரபசுபதி அவர்கள் கடந்த 2024.11.12 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாரங்கபாணி (கிளாக்கர்) - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ர புத்திரனும், காலஞ்சென்ற நாகநாதர் (ஆசிரியர்) - அன்னலட்சுமி (ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மருமகனும், சுசீலாவின் (பாப்பா) பாசமிகு கணவரும், பிருந்தா (கனடா), மயூரதன் (சட்ட வைத்திய நிபுணர் - யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை), தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-காணி சுவீகரிப்பு பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராசன் (கனடா) ஸ்ரீலக்ஷாயினி (கதிரியக்க வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), கலைச்செல்வன் (உதவிப் பணிப்பாளர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிசோத்மன் (கனடா), விஜுஜன் (கனடா), பிருதுவி (கனடா), ஏகாட்சரி (யா/ வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை), ஜதுர்சி (யா/ வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை), நயனி (யா/ வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனும், தணிகாசலபதி, லிங்கேஸ்வரி, காலஞ்சென்ற பழனேஸ்வரி, குமரபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 12.11.2024 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தொலைபேசி இல.
இலங்கை 0778804439 (மகள்)
கனடா +1 647 574 9356 (மகள்)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**
(CS 1841) A-1




# வடமராட்சி மகளிர் கல்லூரி மாணவி சாதனை!

யாழ்ப்பாணம், நவ.14

திருகோணமலை சண்முகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தனி நடனப் போட்டியில் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி மாணவி வைஷாலி கரன் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ச-45-100)

# வயிற்றினுள் கொக்ஹெய்ன்; வெளிநாட்டுப் பிரஜை கைது

கொழும்பு, நவ.14

கொக்ஹெய்ன் போதைப்பொருளுடன் சியராலியோன் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் துருக்கியின் இஸ்தான்புல் நகரத்திலிருந்து நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சந்தேகநபர் கொக்ஹெய்ன் போதைப்பொருளை விழுங்கி வயிற்றில் சேகரித்து வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார் சந்தேகநபரின் வயிற்றிலிருந்து 56 கொக்ஹெய்ன் மாத்திரைகள் வெளியேற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட கொக்ஹெய்ன் போதைப் பொருளின் மொத்தப் பெறுமதி சுமார் 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குகளுக்காக...

டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வைத்து நேற்று மாலை வாகனமொன்று மடக்கிப் பிடிக்கப்பட்டு அதில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை உணவுப் பொதிகள் மீட்கப்பட்டன. கைதான சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அந்த உலருணவுகள் அரசியல் கட்சியொன்றால் மக்களுக்கு வழங்கப்படுவதற்காகக் கொண்டுசெல்லப்பட்டமை தெரியவந்தது. 290 பேருக்கு வழங்கக்கூடிய வகையில் அந்த உணவுப் பொதிகள் காணப்படுகின்றன என்றும், 6 லட்சம் ரூபாவுக்கும் மேல் செலவிடப்பட்டு அவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-56)

## வாக்களிக்க...

தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காகச் செல்வதற்கு விடுமுறை வழங்காத நிறுவனங்கள் தொடர்பில் எமக்கு முறைப்பாடு வந்திருக்கின்றது. அவ்வாறு எந்த நிறுவனமாவது, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதன் பிரகாரம், வாக்களிக்கச் செல்ல இருக்கும் தூரத்துக்கு அமைய வாக்களிக்கச் செல்ல விடுமுறை வழங்காவிட்டால், நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாதகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். அல்லது ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் இரண்டும் விதிக்கப்படலாம். அதனால் மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் பிரசாரப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் பல்வேறு வழிகளில் கட்டணம் செலுத்தப்பட்ட தேர்தல் விளம்பரங்கள் பிரசுரமாகி வருகின்றன. நேற்றுமுன்தினம் வரை இவ்வாறாக 580 விளம்பரங்கள் பிரசுரமாகி இருப்பது தொடர்பில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நாங்கள் முறையிட்டிருந்தோம். தற்போது அது 80 வீதம் வரை குறைவடைந்துள்ளது. இது தவிர தனிப்பட்ட முறையில் சமூகவலைத்தளங்களில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பாகவும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டின் தேர்தல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தைக் காணக் கூடியதாக இருந்தது. அது நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்தல் நடவடிக்கைகளின்போதும் மோதல் சம்பவங்கள் மிகவும் குறைவாகவே பதிவாகியுள்ளன. இலங்கையின் தேர்தல் கலாசாரம் குறிப்பிடத்தக்களவில் நல்ல நிலைக்கு வந்துள்ளது - என்றார். (அ-ம-இ)

## இலங்கைக்கு...

பகிரப்பட்ட நிலையில், மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் இலங்கையால் முன்னெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, பயண எச்சரிக்கைகளைத் தளர்த்துமாறு இலங்கையின் தரப்பில் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தப் பயணத் தடைகள் விலக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா பயண எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்குப் பயண எச்சரிக்கைகளை விடுத்தன. தற்போது அமெரிக்கா பயண எச்சரிக்கைகளை நீக்கியுள்ள நிலையில், ஏனைய நாடுகளும் பயண எச்சரிக்கைகளை நீக்குவதற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (அ-ம-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 10 . 1944

மறைவு
12 . 11 . 2024

### கந்தப்பிள்ளை ஆனந்தராஜா

**(முன்னாள் கமநல சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர் (STA) Jaffna District, உலக உணவுத்திட்டம் - தொழில்நுட்ப உத்தியோகத்தர் கச்சேரி, யாழ்ப்பாணம்)**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை ஆனந்தராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (12.11.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - நவமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா (quanitity Surveyor), ஸ்ரீஸ்லங்கராசா, ஸ்ரீஸ்ரவீந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீரஞ்சினி, தயானந்தன் (கனடா), சண்முகானந்தன் (கனடா), ஸ்ரீசுபாசினி (லண்டன்), சுரேசானந்தன் (பொதுச் சுகாதார பரிசோதகர் - P.H.I முல்லைத்தீவு), ஸ்ரீதர்சினி, ஸ்கந்தானந்தன் (ஆசிரியர் Royal college - Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன், குசலகுமாரி (கனடா), சத்தியகௌரி (கனடா), கேதீஸ்வரன் (லண்டன்), ஜெயாழினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - கச்சேரி, முல்லைத்தீவு), சிவகரன் (ஆசிரியர் - St.John's College Jaffna, New Science hall Jaffna), துஷாரா (அழகுக்கலை நிபுணர் Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ணா செந்தூரன் (பொறியியலாளர்), மிதுர்சன் (கனடா), அனோசன் (University of Rukuna), லதீசன், திலக்சிகா, அசான் (கனடா), அஸ்மறா (கனடா), துஷா (கனடா), துஷான் (கனடா), அபினயா (London, University of Oxford), அக்ஷரா (லண்டன்), ஜஸ்மினி, கௌஷி, ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும், தஸ்வினின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

No **64/06, காளிகோயில் அருகாமை ஐயனார் வீதி, சுன்னாகம்.**

(CS/56685) J-1

**தகவல் : குடும்பத்தினர்**

## விபத்தில்...

ளார். மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த குகதாஸ் விஜிதா (வயது - 40) என்பவரே உயிரிழந்தவராவார். உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற இறப்பு வீட்டில் கலந்துகொள்வதற்காக கடந்த 9ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து வந்த அவர், மறுநாள் திரும்பிச் சென்றுள்ளார். வாகனம் கொக்காவில் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது பன்றி குறுக்கே சென்றதால் வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது படுகாயம் அடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அமைதியான...

பிரார்த்தனை இடம் பெற்றுள்ளது. யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெயரட்ணம், கிருபானந்தக் குருக்கள், நாக விகாரை விகாராதிபதி விமலரத்ன தேரர், ரகீம் மௌலவி, தென்னிந்தியத் திருச்சபையின் பாதிரியார் ராஜ்குமார் ஆகியோர் இந்த சர்வமத வழிபாட்டில் கலந்துகொண்டனர். (அ-ம-இ)

## முறைப்பாடு...

தெரிவித்துள்ளது. செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதிமுதல் நவம்பர் மாதம் 12ஆம் திகதிவரையான காலப்பகுதியிலேயே இந்த 3 ஆயிரத்து 359 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நேற்றும் இன்றும் கூடுதலான முறைப்பாடுகள் பதிவாகும் பட்சத்தில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டும் என்றும் கருதப்படுகின்றது. (அ-ம-இ)

## பக்கச்சார்பின்றி...

குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொதுத்தேர்தல் வாக்கெடுப்புக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அரச அலுவலர்கள் அனைவரும் பொறுப்புடனும் புரிந்துணர்வுடனும் மிகுந்த கவனத்துடனும் எவருக்கும் விசேட கவனிப்பைச் செலுத்தாமல், பக்கச்சார்பின்றி செயற்படவேண்டும்.

தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் வாக்காளர்களுடனும் பொதுத்தேர்தல் வேட்பாளர்களுடனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடனும் நட்புறவுடன் மற்றும் சகிப்புத்தன்மையுடன் செயற்பட வேண்டும். அத்துடன், தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் தங்களுக்கு வழங்கப்படும் கடமைகளைச் சிறப்பாகவும் பொறுப்புடனும் நிறைவேற்றவேண்டும். தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்றத்துக்கும் மாத்திரமே நீங்கள் பொறுப்புக்கூறவேண்டும். எனவேபக்கச்சார்பின்றி பொறுப்புடனும் நியாயமான முறையிலும் தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## பொதுத்தேர்தல்...

நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை மூலம் 196 உறுப்பினர்களும், தேசியப் பட்டியல் ஊடாக 29 பேரும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்காளர்கள், தமது வாக்குரிமையை தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பயன்படுத்தமுடியும்.

196 ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகள் சார்பில் 5 ஆயிரத்து 6 வேட்பாளர்களும், சுயேச்சைக்குழுக்களில் 3 ஆயிரத்து 346 இருந்து வேட்பாளர்களுமாக மொத்தம் 8 ஆயிரத்து 352 பேர் போட்டியிடுகின்றனர். 22 தேர்தல் மாவட்டங்களிலும் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதிபெற்றுள்ளனர்.

வாக்கெண்ணும் பணி மாலை 4.15 மணி முதல் ஆரம்பமாகும். முதற்கட்டமாக தபால்மூல வாக்கெண்ணும் பணி இடம்பெறும். இரவு 11 மணிக்குள் முதலாவது தேர்தல் பெறுபேறு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## தமிழர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு, தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு என்ன? அதற்கு அவர்கள் வழங்க உள்ள தீர்வு என்ன? என்பதை கூறியதை நாங்கள் இதுவரை காணவில்லை. வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு வழக்குத் தாக்கல் செய்ததும் ஜே.வி.பி.தான். அத்துடன் சுனாமிக் கட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டதும் ஜே.வி.பி.தான். அதுபோல போர்ச் சூழலில் போருக்குச் சாதகமாகச் செயற்பட்டதும் ஜே.வி.பி தான். தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சியை கைப்பற்றியுள்ளது. அவர்களிடமும் அந்தப் பழைய நிலைப்பாடு இருக்கின்றதா என்று விடயம் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. காணாமல் போனவர்களது உறவினர்களால் இரண்டாயிரம் நாள்களுக்கு மேலாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டத்துக்கான முடிவு என்ன? காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு என்ன? அது தொடர்பாக இந்த அரசு தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். பொருளாதாரப் பிரச்சினை என்பது நாட்டில் எல்லோருக்கும் இருக்கின்றது. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்தால் எல்லாம் சரி என்பதற்கு அப்பால் சென்று வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்க வேண்டிய அவசியம். இலங்கை ஆசிரியர் சங்கம் என்றரீதியில் நாங்கள் அதற்காகவும் குரல் கொடுப்போம் - என்றார். (சு-27)

## வடமராட்சி...

வீதித் தடைகள் பொது மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ES Printers

2025ஆம் ஆண்டிற்கான நாட்காட்டிகள்

உங்கள் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்து பல வர்ணங்களிலும் அச்சிட்டுத் தரப்படும்.

- பஞ்சாங்க நாட்காட்டிகள்
- அலுவலக பாவனைக்குரிய நாட்காட்டிகள்
- பட நாட்காட்டிகள்
- தினசரி நாட்காட்டிகள்

விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு:-
ES Printers
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
070 356 7811, 077 120 9985

# வாக்குப்பெட்டிகளுடன் சென்ற பஸ் விபத்து

யாழ்ப்பாணம், நவ.14
காலி தென்னரசு பெண்கள் கல்லூரியில் இருந்து புஸ்ஸவெல்ல மடை பிரதேசத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்றுக் காலை வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று காருடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. பின்னர் விபத்துக்குள்ளான பஸ்ஸில் இருந்த வாக்குப்பெட்டிகளை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல பொலிஸார் ஏற்பாடு செய்தனர். (ச-இ)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் பெண்கள் மட்டும் இருக்கக் கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.

077 7 88 73 60

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு தங்கிநின்று வேலை செய்ய சமைக்கத் தெரிந்த பணிப்பெண் தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS/1839) J-1
தொடர்புகளுக்கு :- 077 738 6392

**சாரதி (Driver) தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு Luxury வாகனம் செலுத்தி அனுபவம் உள்ள சாரதி ஒருவர் தேவை.


- கொழும்பிற்கு அடிக்கடி பயணம் செய்யக்கூடியவராகவும் பாதைகள் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- தேக ஆரோக்கியமான, சிறந்த உடற்தோற்றத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சிங்களம் மற்றும் ஆங்கிலம் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

ஆர்வமுடையவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தொலைபேசி : 077 247 5111
மின்னஞ்சல் : harikalana@magicktech.com
(CR43702) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 03 . 1963



மறைவு
12 . 11 . 2024

### குணரட்ணம் குபேரநாதன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் குபேரநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (12.11.2024) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் (கிளாக்கர்) - மரகதம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - முத்தம்மா தம்பதியினரின் மருமகனும், யோகாம்பிகை (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், சுஜித்தா, சிவாசினி, அனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீகுணபூசணி - சுந்தரலிங்கம் (முன்னாள் உரிமையாளர் நியூசரஸ்வதி விலாஸ், பிள்ளையார் ஸ்ரோஸ் - திருநெல்வேலி) அன்புத் தம்பியும் மைத்துனரும், கீர்த்தலனின் (பிரான்ஸ்) மாமனாரும், கைனாவின் (பிரான்ஸ்) ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் ஜெயராணி, புஸ்பராணி, யோகராணி, கனகாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், பர்மிளா, ஜியாமினா (கனடா), சதீஸ், துஷாயினி ஆகியோரின் தாய்மாமனும், காலஞ்சென்றவர்களான அமிர்தம், மகேந்திரம் ஆகியோரின் பெறாமகனும் சிதம்பரப்பிள்ளையின் மருமகனும், Dr. பேரின்பநாதன், வயித்திலிங்கம் (கண்ணன் லொட்ஜ் - திருநெல்வேலி) ஆகியோரின் உடன்பிறவாத சகோதரருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மருமகள்
சர்வானந்தன் பர்மிளா
077 905 7937

224 இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(CS/56660) J-1

## 40 ஆண்டுகளான பின்பும்....



பிறந்தமை : 14.03.1940 இறந்தமை : 14.11.1984

### அமரர் விசுவலிங்கம் சிங்காரவேலு

(தலைமைச் செயலக உதவி அரசாங்க அதிபர், முல்லைத்தீவு
உதவி அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று, முல்லைத்தீவு
உதவி அரசாங்க அதிபர், வெங்கலச் செட்டிகுளம், வவுனியா)

**நினைவுகளே முதுசொங்களாய்...,**
இன்று போலுள்ளது.
போய்வருவதாகச் சொல்லி நீங்கள் சென்ற அந்தக் கணம் - எங்கள் வாசலால்
ஒரு புத்தகமும் கேக்குமாக என்றும் போல்
கொள்ளை கொள்ளும் புன்னகையுடன் திரும்பி
வந்துவிடமாட்டீர்களா? ஏங்குகின்றது மனசு. - அன்று
இல்லையென்று சொன்ன ஜீப் வராமலே போயிருக்கக் கூடாதா?
காலங்கள் கரைந்து போனாலும்
நாங்கள் ஒன்றாக இருந்த அந்த நாள்களின் நினைவுகள் கரையாது.

அப்பா நீங்கள்
கடமைக்கும் அப்பால் மக்களுக்கு செய்த சேவைகளும் - அதற்காய்
உங்கள் மரணத்தில் மக்கள் சிந்திய கண்ணீரும்
இன்றும் உங்கள் நினைவு முல்லையில் நிற்பதுவும்
எங்களுக்கு என்றும் பெருமைதான்.

தேசத்திற்காய் சென்று, உங்களோடு சேர்ந்த தம்பியினதும் **(சி. முருகவேள்)**
காலம் உங்களுடன் இணைத்துவிட்ட அம்மாவினதும் **(சி. புவனேஸ்வரியம்மா)**
நினைவுகளுடனும்

**உங்கள் நினைவுகளுடன் நாங்கள்...**
**பிள்ளைகள் குமரவேள், தாரணி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
077 650 8517

(cs.56661) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org